செ.வெ.எண் :02/ செப்டம்பர் நாள் : 01.09.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## பள்ளிகள் திறக்கபட்டுள்ளதை அடுத்து கொரேனா தடுப்பு நடவடிக்கை குறித்து

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு

9 முதல் 12 வகுப்பு வரை பயலும் மாணவ மாணவியர்களுக்கு இன்று (01.09.2021) முதல் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதை அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள், பேராவூர் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு நேரடியாக சென்று கொரோனா தடுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கொரோனா தடுப்பு நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தமிழகத்தில் இன்று (01.09.2021) முதல் கல்லூரிகள் மற்றும் 9 முதல் 12 - ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 264 பள்ளிகள் மற்றும் 40 உயர்கல்வி நிறுவனங்கள் திறக்கப்பட்டுள்ளன. இக்கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் மாணவ மாணவியர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில் அனைத்து முனனெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக 137 அரசு பள்ளிகள், 49 அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், 78 சுயநிதி பள்ளிகள் என மொத்தம் 264 பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளில் 9 ஆம் வகுப்பில் 8684 மாணவர்களும், 8636 மாணவிகளும், 10 ஆம் வகுப்பில் 8687 மாணவர்களும், 8563 மாணவிகளும், 11 ஆம் வகுப்பில் 7469 மாணவர்களும், 7789 மாணவிகளும், 12 ஆம் வகுப்பில் 7112 மாணவர்களும், 7813 மாணவிகளும் ஆக மொத்த 31952 மாணவர்களும், 32801 மாணவிகளும் என மொத்தம் 64,753 மாணாக்கர்கள் உள்ளனர். இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களில் 97 சதவீதம் நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோல, மாவட்டத்தில் அரசு சட்டக் கல்லூரி, அரசு மற்றும் தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி கல்வியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், நிலையங்கள் என மொத்தம் 40 உயர் கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1,704 ஆசிரியர்கள்/விரிவுரையாளர்கள் பணிபுரிகின்றனர். அதில் 1,099 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. பள்ளி மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்காக ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக சிறப்பு முகாம்கள் நடத்தட்பட்டுள்ளன. தொடர்ந்து சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு மீதமுள்ள ஆசிரியர்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி நிர்வாகம் சார்ந்த அலுவலகங்கள் தங்கள் பகுதிகுட்பட்ட பள்ளி, கல்லூரி வளாகங்கள் மற்றும் வகுப்பறைகளில் கிருமிநாசினி தெளித்து சுத்தம் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி நுழைவாயிலில் உடல் வெப்பநிலை பரிசோதனை கருவி மூலம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பரிசோதித்து உறுதி செய்த பின்னரே அனுமதித்திட வேண்டும் எனவும், பரிசோதனையின் போது யாருக்காவது உடல் வெப்பநிலை அதிகரித்துள்ளது என கண்டறியப்பட்டால் உடனடியாக அவர்களுக்கு உரிய மருத்துவ பரிசோதனை மற்றும் ஆலோசனை வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்து, வகுப்பறையில் போதிய சமூக இடைவெளி கடைபிடித்திடும் வகையில் வகுப்பறைக்கு தலா 20 மாணாக்கார் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அனைத்து கல்வி வளாகங்களிலும் கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக விழிப்புனர்வு பதாகைகள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பள்ளி வளாகங்களில் மாணவ, மாணவியர்கள் பங்கேற்க்கும் வகையிலான கலைநிகழ்ச்சிகள், பேரணிகள் போன்ற நடைவடிக்கைளை தவிர்த்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாணவ, மாணவியர்கள் தங்களின் கைகளை சுத்தமாக பராமரிக்க ஏதுவாக போதிய கிரிமிநாசினி / சோப்பு மற்றும் தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை சம்மந்தப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி நிர்வாகங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

கல்வி நிலையங்களில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அரசு வழங்கியுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை கண்காணித்திட வட்டாட்சியர்/வட்டார வளர்ச்சி நிலை அலுவலர் தலைமையில் சுகாதாரத்துறை, காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள 11 கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் மாணவ மாணவியர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி சுபாசினி உடன் இருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**